INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.34256/ijot2137

# வள்ளலார் அருளிய இறைநிலை கொள்கை - ஓர் ஆய்வு

வீ. கௌசல்யா [அ, *]

[அ] அரியகையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா

# Principles of Theological touch in Vallarars work - An analysis

V. Gowsalya [a, *]

[a] Department of Rare Paper Manuscripts, Tamil University Thanjavur – 613010, Tamil Nadu, India
*Corresponding author Email: gowsalyavdl@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijot2137
Received: 11-06-2021; Revised: 07-08-2021; Accepted: 09-08-2021 Published: 11-08-2021

**Abstract:** The article is being carried out on the theocratic principle given by vallalar. In these, the morals of the philanthropists are explained to the people of today's society. It is not mankind that a man is born, lived, and then dies. It is only in human birth that there is a possibility of seeing and attaining God. That is why the philanthropist instructs us on some ethics.  Love and compassion should be felt in all living beings. This article reveals that those who act with in their heart can truly reach God, who completely eliminates caste, religion and race differences, and who, when they suffer from hunger, who relieves them of suffering and who takes pity without killing any of them, can reach God by heart.

**Keywords:** Love, God, Vallalar, Human.

## முன்னுரை

வள்ளலார் இன்றைய சமுதாயத்தில் வாழ்ந்து அனுபவித்துக் கூறும் இறைநிலை என்பது, சோதி நிலையை அடைய கூடியதாகும். அடைவதற்கு சில அறநெறிகளை பின்பற்ற வேண்டும். கடவுள் ஒருவரே, அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர். சாதி, மதம், இனம் வேறுபாடுகளைத் தவிர்த்தல். சீவகாருண்யம் என்னும் பசித்துன்பத்தை குறிப்பறிந்து போக்குதல். எவ்வுயிரையும் கொல்லாமை இருத்தல். சாகாதவனே சன்மார்க்கி முதலிய அறநெறிகளை பின்பற்றினால் தான் சோதி நிலையை அடைய முடியும். என்பதை இக்கட்டுரை மூலம் ஆராய்ப்படுகிறது.

## இறைநிலை

இறைநிலை என்பது வள்ளலார் மூன்று நிலையில் குறிப்பிடுகின்றார். முதல் சங்கம், சங்கத்தில் நல் ஒழுக்கம், அறம், பாண்பாடு, நாகரிகம், நீதி, போன்றவைகளை கற்று கொடுக்கும். பின்பு தருமசாலையில் பிறருக்கு உணவு வழக்குவதன் மூலம் அன்பு, இரக்கம், கருணை, சகிப்புத்தன்மை முதலிய பிறர் வலிகளை தம் வலிபோல் உணர வைக்கும். அடுத்து, சன்மார்க்கம் மேற்குரிய இரண்டையும் யாரு ஒருவர் சா◌ியாக கடைப்பிடித்து வருகின்றார்களோ அவர்களுக்கு மூன்றாவது நிலையாகி சன்மார்க்கம் என்ற உலகு உயிர்கள் அனைத்தும் ஒற்றுமை என்ற நிலையை உணர்த்தும். சங்கம், சாலை, சன்மார்க்கம் ஆகிய மூன்றையும் பெருபவர்கள் ஞானசபை என்ற இறை சோதியை அடைய முடியும் (Mani, 2004).

அதை வள்ளற் பெருமானார், கடவுள் ஒருவரே, அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர். கடவுள்

ஒருவரே என்றும், அவர் அன்பு மயமானவர் என்றும், நமக்கு தெளிவுபடுத்திய பிறகு தான். கடவுள் வழிபடுவதற்கேற்ற நெறி சன்மார்க்க நெறி ஆகும். சன்மார்க்க என்பது உண்மை நெறி எனப் பொருள்படும். உண்மைப் பொருள் பற்றிய உண்மை ஞானத்தை அகஅனுபவம் என்னும் உண்மை மார்க்கமான சன்மார்க்க நெறியை உண்த்துகின்றன. இக்கருத்தினை,

"சர்வசித்தியுடைய கடவுள் ஒருவர் உண்டென்று அவனை உண்மை அன்பால் வழிபாடு செய்து பூரண சித்தியைப் பெற வேண்டுமென்பதே சன்மார்க்கக் கொள்கை எனவும், ஆன்மாவனது சில நெறிகளைப் பின்பற்றி அதன் மூலம் அடைய வேண்டிய பேறுகளை அடையலாம் என அனைத்துச் சமயவாதிகளும் கூறி வருகையில், வள்ளலார் மட்டும் சன்மார்க்கம் என்பது ஆன்மாவானது தன் உண்மைத் தன்மையில் நிற்றல் என எடுத்துக் கூறுவது ஒரு வகை புதுமையே என்பர் தத்துவ அறிஞர்".

வள்ளலார், "ஒன்றே சிவம் அதை ஒன்று சன்மார்க்கமும் ஒன்றே".

"சிற்சபையில் நடுகின்ற நன்றான கடவுளே".

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வமும்". - திருமூலர் பௌத்தம்

"புத்தர் கடவுளைப் பற்றி ஒன்றும் கூறாமையான், அவரை நாத்திகர் எனச் சிலர் கருதுகின்றனர். புத்தர் அநமென்னும் கடவுளைச் சீலமென்னும் வழி நிறுத்திப் போந்தார். கடவுளை வேதமென்னும் நூலாகவும் யாகமென்னும் கொலைக் குழியாகவும் சாதியென்னும் சாக்கடையதகவும் மன்பதை கொண்டதை மாற்றப் போந்த அறவோர் புத்தர் பெலுமானாதலால், அவர் கடவுளை அநமென்றும் அதற்குரிய வழியைச் சீலமென்றும் அறிவுறுத்தினார்".

"உன் ஆண்டவராகிய கடவுளிடம் முழு இதயத்

தோரும் முழு ஆத்மாகவுடனும் அன்புகூர வேண்டும்". (மத்தேயு 22-31-40).

"கடவுளின் இராச்சியத்தில் ஊழியம் செய்வதே

பொரிதாகக் கருதப்படும்". -(லூக்கா22-25). இயேசுநாதர்

## திருக்குர்

"இறைவன் (அல்லா) ஒருவரே. அவர் எவரையும் பெறவில்லை எவராலும் பெறப்படவுமில்லை. அவருக்கு நிகராக எவருமில்லை".

## அவர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்

சோதி வடிவம் ஒன்றே வழிபடுவதற்கு ஏற்றது என்று கூறிகின்றன. இறைவனை அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்று உணர்த்துவதே சுத்த சன்மார்க்கம் என்று விளக்கி கூறுகின்றார். பிறகு சுத்த சன்மார்க்கத்துக்குரிய சாதகமாக கூறுவது எல்லா உயிர்களிடத்தும் தயவாகவும், இறைவன் இடத்தில் அன்பாகவும் இருக்க வேண்டும். இங்கு முக்கியமாக அவனிப்பது என்னவென்றால் பாசத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. பாசம் இருந்தால் எதிர்பாப்புகள் அதிகமாகும். எதிர்பாப்பால் துன்பங்கள் அதிகமாகும். அதனால், வள்ளலார் சீவர்கள் இடத்தில் தயவும், இறைவன் இடத்தில் அன்பும் காட்ட வேண்டும் என்றார். வள்ளலார் இறைவனை எவ்வாறு எல்லாம் சோதியாய் அழைக்கின்றார். என்பதை அவர் பாடல்கள் மூலம் உணர்த்துகின்றார். அவை,

"அன்றே என்னை அடிகள் ஆக்கி ஆண்ட ஜோதியே

அதன்பின் பிள்ளை ஆக்கி அருள்இங் களித்த ஜோதியே

நன்றே மீட்டும் நேயன் ஆக்கி நயத்த ஜோதியே

நானும் நீயும் ஒன்றென் றுரைத்து நல்கு ஜோதியே".

"அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் ரேதிரு

அம்பல வாணரே வாரீர் வாரீர்

அன்புடைய யாளரே வாரீர்".

ஆறாம் திருமுறை முழுவதும் இறைவனின் ஜோதி வழிபாட்டை தான் எடுத்துரைக்கின்றார். அவற்றின் சில பாடல்களை மட்டும் தான் இங்கு குறிப்பிட்டுள்ளன (Sivaraman, 2005). பிற சான்றோர்கள் ஜோதி வழிபாட்டைப் பற்றிய குறிப்பிட்டுயுள்ளன. அவை,

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்

சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி". -சம்பந்தர் தேவராம்

"சோதியாய்ச் சுடருமானார் சுண்ணவெண் சாந்து பூசி

ஆதியாய் உலகமேத்த உகந்து தாம் அருள்கள் செய்வார்". - அப்பர் தேவாரம்.

"சோதியுமாய்ச் சுருங்காததோர் தன்மையுள்

நீதியுமாய் நித்திமாகி நின்றானே". - திருமந்திரம்

"சுத்தநிர்க் குணமான பரதெய்வமே பரஞ்சோதியே". - தாயுமானவர்.

"கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை". - திருவெம்பாவை.

"சோதியாய்த் தோன்றும் உருவமே". -கோயில் திருப்பதிகம்.

"சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே". -அருட்பத்து, மாணிக்கவாசகர்.

சாதி, மதம், இனம் வேறுபாடுகள்

இன்றைய சமுதாயத்தில் குப்பையாக இடக்கின்ற சாதிப் பிரிவுகள் மனிதன் மனதில் ஓர் ஒற்றுமை உணர்வை வரவிடாமல் தடுத்து நிறுத்துகின்றன (Thiruvarupragasa Vallalar, 1999). சாதி, மதம், இனம், சமயம் கடந்த நிலையே சமுதாய அறங்கள் என்று வள்ளலார் கருதினார். ஆதலின் இவை தொடர்பான சந்தடிகள், சண்டைகள், வாக்குவாதங்கள், உயர்வு, தாழ்வு ஆகியவைற்றைப் பெரிதும் கண்டித்துக் கூறுவனதக் அவர் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. அவை,

"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே

சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே

ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்

அலைந் தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே".

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென

ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி". (அகவல் வரி 211).

சமுதாயத்தை விளித்து கூறும் இல்லறங்கள் சாதி, சமயம், மத பேதமற்றவனே சன்மார்க்கி என்பது வள்ளலாரின் நெறியாகும். இவற்றை எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! என்று தொடங்கும் விண்ணப்பத்தின் மூலம் அறிய முடிகிறது. பிற சான்றோர்கள் குறிப்பிடுவது. அவை,

பௌத்தம் "உயிர்கட்கு உதவல் என்னும் கருத்துக்கே பிறப்பிடல் பௌத்த மதம் என்று உறுதியாக நம்புகிறேன். கொல்லாமை சீவ காருண்யம் முதலியன எங்கெங்கு உள்ளனவோ, அங்கெல்லாம் பௌத்த தர்மமுண்டு எனக் கொள்க".

இசுலாம் சமயம் அடக்கத்தையும், பணிவையும் பெரிதாக வற்புறுத்துகிறது.

"பூமியில் கர்வம் கொண்டு நடக்க வேண்டாம்

இவ்வுலக வாழிக்கை வீணும் விளையாட்டுமே

அன்றி வேறில்லை

இறைவன் நல்லடியார்கள் பூமியில் பெருமை இன்றிப்

பணிவு, அமைதி எனப்வற்றைக் கடைபிடித்து நடப்பார்கள்".

"சாத்திரம் பலப் பேசும் மூடர்கள்

கோத்திரம் குலம் கொண்டு என் செய்வீர்". -அப்பர்.

"சாதி குலம் பிறப்பென்னும் அழிப்பட்டு

தடுமாறும் ஆதமிலி நாயேனே". -மாணிக்கவாசகர்.

"சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம்". -பாம்பாட்டிச்சித்தர்.

## சீவகாருண்யம்

சீவகாருண்யம் என்பது ஏழைகளுக்கு உணவு வழக்குவது மட்டும் இல்லை. ஒரு சீவன் எதை நினைத்து அதன் ஆன்ம ஏங்குகின்றதோ. அவற்றை, அவர்களின் முகம் குறிப்பறிந்து அந்த ஆன்மாவின் ஏங்கத்தை போக்குவதும் சீவகாருண்யம் ஆகும் (Thiruvarupragasa Vallalar, 2000). ஒரு சீவன் பொருளுக்காக ஏங்குகின்றதோ அல்லது ஆசைகாக ஏங்குகின்றதோ இல்லை அன்பிற்காக ஏங்குகின்றதோ, தனிமையில் (யாருமே நமக்கு இல்லையே) என்று ஏக்கத்தோடு இருக்கின்றார்களே, இல்லை நோய்யால் துன்பம்படுகின்றார்களே என்பதை அவர்கள் முகத்தில் குறிப்பறிந்து உதவ வேண்டும். இதுவும் சீவகாருண்யம் ஆகும். இவற்றை அறியாத மனிதர்கள் உணவு வழக்குவது மட்டும் தான் சீவகாருண்யம் என்று நினைக்கின்றார்கள். இவற்றிள் மிக முக்கியமான ஒன்று எண்ணத்தால், வாக்கால், செயலால் யார்வுடைய மனதையும் புண்படும் மாதிரி நடத்துக்கோ, பேசவோ கூடாது. அப்படி நடப்பவர்களுக்கு அவர்கள் செய்த சீவகாருண்யம் புண்ணியம் நீங்கி பாவம் உண்டாகும். வள்ளலார் பசி துன்பத்தை எவ்வாறு எல்லாம் வரும் என்பதை, எடுத்துரைக்கின்றார்.

"பசி என்பது விஷக்கற்றாற்றானது, ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே ஜீவகாருணியம்". என்றும், பசி யென்கிற கொடுமையாகிய தேள் வயிற்றில் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு. ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தை தீர்ப்பதே ஜீவகாருணியம்" என்று குறிப்பிடுகின்றார்.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றான் பொருள்வைப் புழி". - திருவள்ளுவர் (226).

"ஏழைகளுக்கு உணவு அளிக்காததுடன் உணவு வழங்கப் பிறரைத் தூண்டாதிருப் போரே மறுமைத் தீர்ப்பு நாளை பொய்யாக்குவர்". -இசுலாம்.

## கொல்லாமை, புலால் உண்ணமை

உயிர்க்கொலை செய்வதும், புலால் உண்பதும் அது உயிர்களுக்கு குற்றமாகித் துன்பத்தை உண்டாகுகின்றன. அவற்றை தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். வராக இருப்பார்கள். பிறகு, பசி நேரிடும் போது அவற்றை மட்டும் தீர்க்கப்பட வேண்டும் என்றார். இதை அவர் பாடல் வரிக்ள மூலம் அறிய முடிகிறது.

"உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்

உறவினத்தார் அல்லர்அவர் புறவினத்தார் அவர்க்குப்

பயிப்ப்புறும் ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக

பரிந்துமற்றை பண்புரையேல் நண்புதவேல் இங்கே".

உயிர்களை கொலை செய்பவரும், புலால் உண்பவரும் தமக்கு நண்பனாகவும், உறவினராகவும் அவர்கள் இருக்கமாட்டார்கள். அவர்கள் புற இனத்தார். ஆடு, மாடு, கோழி, பன்றி ஆகிய இவைகளை கொல்வதால் மட்டும் துன்பம் நேரிடாது. வன்சொல்லாலும், கொடிய வார்த்தையாலும், தீங்கு நினைத்தாலும், பிறா் மனம் நோக நடத்தாலும், எண்ணத்தால் தீங்கு நினைத்தாலும் முதலி இவைகள்

அனைத்தும் கொலை செய்வதற்கும், புலால் உண்பதற்கும் சமமாகும். விலங்குகளுக்கு உயிர், உணர்ச்சி இருக்கு. அவற்றை கொன்றால் திரும்ப உயிர்பிக்க முடியாது. ஆனால், தாவரங்களுக்கும் உயிர் உண்டு. அவற்றை நாமே முளைக்க செய்கின்றோம், எவ்வித உணர்ச்சியும் இல்லை. சான்றாக, நம் உடம்பில் இருக்கக்கூடிய நகம், முடி இவற்றை வெட்டவெட்ட வளர்ந்துக் கொண்டு தான் இருக்கின்றன. அது போல் தான் தாவரங்களும், வேரோடு பிடிக்கினாலோ, வெட்டனாலோ நமக்கு பாவம் நேரிடும். இதனை, வள்ளலார் ஜீவகாருணிய ஒழுக்கத்தில் பக்கம் 115-இல் தெளிவாக விளக்கியுள்ளார்.

"வன்புடையார் கொலைகண்டு புலை உண்பார் சிறிதும்

மரபினர் அன்றாதலினால் வகுத்த அவரளவில்

அன்புடைய என்மகனே பசிதவிர்த்தல் புரிக

அன்றி அருட்செயல் ஒன்றும் செயத்துணியேல்". (பாடல் 72.73).

## திருவள்ளுவர்

தன் உடலைப் பெருக்குவதற்காக பிற உயிரைக் கொன்று உண்பது பாவ செய்யலாகும் என்றார்.

"தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்

எங்ஙனம் ஆளும் அருள்". -(251, 327).

"கொல்லா விரதம் கொண்டோரே நல்லோர் மற்று

அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே". - தாயுமானவர்.

## இயேசு நாதர்

"படைக்கின் ஆதிமூலத்தை நாம் நமது பிதா என்று உறவு கொண்டாடுவோம் என்றால் அதே படைப்பில் உற்பத்தியாகியுள்ள மிருகங்கள், பறவைகள் நமக்கு உறவு முறையாகின்றன அல்லவா? அவ்வாறெனில் அவைகளைக் கொன்று விழுங்குவது சகோதரக் கொலையாகாதா?". (இயேசுநாதரின் போதனைகள் பக்-52). சாகாதவனே சன்மார்க்கி சாதி, மதம், இனம் வேறுபாடுகள் மற்றும் ஜீவகாருண்யம், கொலை, புலால் தவிர்த்தவர்கள், இவைகளை யார் ஒருவன் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருகின்றார்களோ, அவர்களே சாகாக்கல்வி கற்று, மரணம்மில்லா பெருவாழ்வு பெற்று. இறைவனின் சோதி நிலையை அடைய கூடியவர்கள். அவற்றிள் வள்ளற் பெருமான் சாகாக்கல்வி என்ற மரணமில்லா பெருவாழ்வை அடைந்தார். என்பதற்காக அவர் பாடல் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன. அவை,

"அருட்ஜோதி ஆனேன்என்று அறையப்பா முரசு

அருளாட்சி பெற்றேன் என்று அறையப்பா முரசு

மருட்சார்பு தீர்ந்தேன் என்று அறையப்பா முரசு

மரணந்த விர்ந்தேன் என்று அறையப்பா முரசு".

## திரு.வி.க

"சாகாநிலை என்பது என்ன? மீண்டும் பிறவாத ஒரு நிலை எனக். இறவாதோர் எவரோ அவரே மீண்டும் பிறவாதவராவார். ஆகவே, இறவா நிலையடைய உழைப்பதே மீண்டும் பிறவாமைக்குக் கால் கொள்வதென்பது உன்னத்தக்கது".

## முடிவுரை

இறைவனை காணுவதற்கு சாதி, மதம். இனம் வேறுபாடுகளை அறவே நீங்கி. ஒரு சீவன் எவ்வித துன்பத்தில் வாடுகின்றதோ அத்துன்பத்தை குறிப்பறிந்த போக்குதல். பிறர் துன்பத்தை தம் துன்பம் போல் உணர்தல். எவ்வுயிரையும் கொலைச் செய்யாமல் இருத்தல். எவ்வித எதிர்ப்பாப்பும் இன்றி எல்லா உயிர்களிடத்தும் அன்பு, இரக்கம், தயவு, கருணை முதலிய இவை, அனைத்தும் யார் ஒருவன் காட்டுகின்றார்களோ அவர்கள் சத்தியமாகவே இறைவனை காண முடியும். ஏன்னென்றால் இறைவன் இரக்கம். அன்பு நிறைந்த உள்ளத்தில் என்றும் குடிக்கொண்டு இருப்பான். இறைவனை உள்ளத்தில் உணார்த்தவர்கள் நிச்சியமாக சோதி வடிவத்தையும் அவர்களால் உணர முடியும் என்றே இக்கட்டுரை மூலம் தெளிவாக அறிய முடிகிறது.

## References

Mani, Su. Ku., (2004) Vallalar Neri, Chennai, Inida.

Sivaraman, Pi. Ki., (2005) Vallalarin Meinyanamum Vinyanamum, Vallalaar Pathippagam, Tanjore, India.

Thiruvarupragasa Vallalar, (1999) Thiruvarutpa Aaravathu Thirumurai, deivanilayam, Kadalur, India.

Thiruvarupragasa Vallalar, (2000) Thiruvarutpa urainadai, deivanilayam, Kadalur, India.

**Funding**

This study was not funded by any grant

**Conflict of interest**

The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

**About the License**

© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

V. Gowsalya, Principles of Theological touch in Vallarars work - An analysis, Indian Journal of Tamil, 2(3) (2021) 42-47. https://doi.org/10.34256/ijot2137